**S.C.No.58/2014**

**நாள். 13.12.2021**

**அ.சா.1 திரு.சரவணன்**

**மனுவின் முன்னிலைக்கு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**காவல்நிலையத்தில் காவலர்கள் தான் புகாரை எழுதி கொடுத்தார்கள். புகார் எழுதும்போது உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் எஸ்.பி. இருந்தார்கள். எழுதிய காவலர் பெயர் தெரியுமா என்றால் நான் சொன்னதை பதிவு செய்தார்கள். பெயர் பார்க்கவில்லை. நான் சொன்னதை எழுதிய பிறகு படித்து காண்பித்தாரா என்றால், தெளிவாக படித்து காண்பித்தார். அந்த புகாரில் எதிரி என் மகனை அழைத்து சென்றது சம்பந்தமாக லோகநாதன், நடேசன் இருவரும் பார்த்ததை சொல்லி தான் எனக்கு தெரியும் என்று புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். ஊராரும் பார்த்தார்கள். ஊரார் அனைவருக்கும் தெரியும். எஸ்.ஐ. இரண்டு பெயர் சொன்னதால் இரண்டு பெயர் மட்டும் எழுதினேன். நான் சொன்ன புகாரை எழுதியதை சரியாக படித்து பார்க்காமல் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. புகாரை ஊரார் முன்னிலையிலும் படிக்கப்பட்டது. ரங்க கவுண்டர் மகன் நடேசன் மதன்குமாரை கோவிலுக்கு பின்னால் அழைத்துச் சென்றதாக சொன்னதை புகாரில் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல. பூங்காவனம் மகன் முருகன் புறடையார் கோவில் ஆற்றுப்பக்கம் வேகமாக சென்றதை பார்த்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. எதிரியின் மீது சந்தேகத்தின்பேரில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நேரில் பார்த்ததை வைத்து தான் புகார் கொடுத்தோம். விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லையென்றால் சரியல்ல. குழந்தை மதன்குமார் அணிந்திருந்த அரைநாண்கயிறை கிணற்றில் இருந்து எடுப்பதற்காக கிணற்றில் இருந்த நீரை வடித்தது பற்றி புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் பதட்டமாக இருந்ததால் சொல்லவில்லை. நகையை தேடும்போது ஆய்வாளரோ, புலன் விசாரணை அதிகாரியோ உடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். வேறு யார் யார் இருந்தார்கள் என்றால் முன்னாள் தலைவர், ஊரார் இருந்தார்கள். யார் யார் என்று குறிப்பிட்டு சொல்லுங்கள் என்றால் சாட்சி 2012 நான்காம் மாதம் நடந்த சம்பவம்**

தற்போது கேள்வி கேட்டால் என்னால் சொல்லமுடியாது என்று சாட்சியம் அளிக்கிறார். நான் முதற்சாட்சியம் சொன்னது எப்போது என்றால் கொரேனாவிற்கு முன்னால் சொன்னேன். சேட்டு நிலம் அறுவடை செய்யப்பட்ட சமமான நிலம் என்றால் சரி தான். ஆனால் வைக்கோல் அங்கு இருந்தது. நகையின் விலை மதிப்பு அதிகமும் இல்லை, அதை திருட வேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல. நகைக்காக குழந்தையை கொலை செய்யும் நோக்கம் எதிரிக்கு இல்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த நகையும் எடுத்து தரவில்லையென்றாலும், சாதாரணமாக நிலத்தில் இருந்தது என்றால் சரியல்ல. எதிரி தான் உதவி ஆய்வாளரிடம் எடுத்துக்கொடுத்தார். காவல் அதிகாரியின் விசாரணையில் வேறு இடத்தில் கைப்பற்றப்பட்டதாக உள்ள நகை நான் சொல்வதுபோல் எடுத்து தரவில்லை என்றால் காவல் அதிகாரி விசாரணை பற்றி எனக்கு சொல்ல தெரியாது.யூகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாருக்கு யூகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.